**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**MCOP 162/2022**

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 16 ஆம் நாள் புதன்கிழமை

ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எஸ். முத்துராமன்,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | அருண்குமார் | த /பெ. | அம்பிகாபதி |
| கிராமம்: | பரவாக்கோட்டை | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | இந்து | தொழில்: | |
| வயது: | 24 | முகவரி: | 2/1223 சுவாமிநாதன் தெரு, பரவாக்கோட்டை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 16.07.2025

**முதல் விசாரணை :-**

நான் மனுவின் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. எனவே மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 08.08.2022 | முதல் தகவல் அறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | | மனுதாரர் ( அருண்குமாரின் ) காயச்சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 10.08.2022 | விபத்து காரணமான லாரி TN 88 H 3228 மற்றும் TN 66 AH 7754 என்ற இருசக்கர வாகனம் ( 2) | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | | குற்ற அறிக்கை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | | கரூர் ராஜ் ஆர்த்தோ மருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிச்சை விபரக்குறிப்பு | அசல் |
| ம.சா.ஆ.6 | 10.04.2023 | சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிச்சை விபரக்குறிப்பு | அசல் |
| ம.சா.ஆ.7 | | கைவசமுள்ள மருந்து மற்றும் மருத்துவக்கட்டணம் ரசீது | அசல் |
| ம.சா.ஆ.8 | | கைவசமுள்ள மருந்து வாங்கியதற்கான ரசீதுகள் | அசல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.9 | | மனுதாரர் ஆதார் அடையாள அட்டை | ஜெராக்ஸ் |
| ம.சா.ஆ.10 | | மனுதாரர் வங்கி பாஸ் புத்தகம் | ஜெராக்ஸ் |

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் நான் வாகனத்தின் பின்புறம் அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான். அந்த வாகனம் என் நண்பருடையது தான். விபத்து சமயத்தில் என் நண்பர் ஜான் டேவிட் வாகனத்தை ஓட்டினார். விபத்து சமயத்தில் நான் புகார் அளிக்கவில்லை. விபத்து சமயத்தில் நான் புகார் அளிக்கவில்லை. வாகனத்தை ஓட்டிய ஜான் டேவிட்டுக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது அவ்வாறு இருந்திருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் தலைகவசம் அணிந்திருந்ததை முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லவில்லை. வழக்கிற்காக தலைகவசம் அணிந்து சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு தலைக்கவசம் அணிந்திருந்தால் தலையில் காயம் ஏற்பட்டு ஜான்டேவிட் இறந்திருக்கவாய்ப்பில்லை என்றால் சரியல்ல. தலைகவசம் உடைந்துபோனது அங்கிருந்த போலீசார் தலைக்கவசத்தை எடுத்து ஒப்படைத்தார். நின்றுகொண்டிருந்த லாரியின் மீது பின்னால் சென்று மோதிவிட்டோம் என்றால் சரியல்ல. சென்றுகொண்டிருந்த லாரிதிடீர் என்று நின்றதால் விபத்து எற்பட்டது என்றால் சரிதான். சாதாரணமாக ஒரு வாகனத்திற்கு பின்செல்லும் வாகனம் இடைவெளிவிட்டு செல்லவேண்டும் என்றால் சரிதான் ஆனால் அந்த லாரியின் சிவப்பு லைட் எரியவில்லை. எனது நண்பர் தான் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டதெரியாமல் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. என் நண்பர் தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. என் நண்பர் இறந்துவிட்டதால் லாரிஓட்டுனரை குற்றவாளியாக கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. லாரி டயர் வெடித்து விபத்து எற்பட்டதா என்றால் எனக்கு விபத்து ஏற்பட்டவுடன் சுயநினைவுடன் இல்லை. இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்றாலும் தெய்வாதினமாக ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் நண்பர் ஓட்டிசென்ற வாகனத்தின் உரிமையாளரையும் காப்பீட்டு நிறுவனத்தையும் இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு பிழையுடையது என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 2 ல் எதிரே வந்த வாகனம் மோதியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது ஆம்புலன்ஸ் ஓட்டுநர் கொடுத்துள்ளதாக பின்னர் தெரிந்துகொண்டேன். விபத்து குறித்து தெளிவான உண்மையை நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நஷ்டஈடு அதிகம் பெற வேண்டும் என்பதற்காக இயலாமையை மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் விபத்து சமயத்தில் நான் Diplomo Meganical Engineering படித்துகொண்டிருந்தேன். என்னுடைய படிப்பு தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் படித்துகொண்டிருந்ததால் வருமான இழப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் சொல்லிள்ள செலவினங்களுக்காக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சென்றுகொண்டிருந்த லாரி சிக்னல் காட்டாமல் திடீர் என்று நிறுத்திவிட்டார்கள் என்று நாங்கள்

குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயம் சரியாகிவிட்டது என்றால் சரியல்ல. சாட்சி தனக்கு முதுகெலும்பு தண்டுவடத்தில் D7 பலத்தகாயம் ஏற்பட்டதாக கூறுகிறார் . முதுகெலும்பு உடைந்துவிட்டது என்றார். எனது நண்பர் கவனக்குறைவாக ஓட்டுநர் உரிமம் இல்லாமல் விபத்தை ஏற்படுத்தியுள்ளதால் 2 ம் எதிர்மனுதாரர் எந்தவித நஷ்ஈடும் வழங்க கடைமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. அவ்வாறு நான் இழப்பீடு பெறுவதாக இருந்தால் எங்கள் கவனக்குறைவும் இதில் இருப்பதால் 50 சதவீத இழப்பீடு மட்டுமே பெறமுடியும் என்றால் சரியல்ல. 2 ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சார்பு நீதிபதி,

மன்னார்குடி